**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 24 ம் நாள்
**இ.ம.எண். 4/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 30/2022**

M. ஆனந்தி ..மனுதாரர்/வாதி

//எதிர்//

1. J. அலில்ரஹ்மான்
2. சஜித் ..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 27.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.K. கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று (10.11.2025) இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரரால் இம்மனுவானது கடந்த 23.01.2025 அன்று தள்ளுபடி ஆன தாவா வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுவின் சுருக்கம் :</u>**

2. இந்த மனுவின் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் வாதி ஆவார். மேற்படி எதிர்மனுதாரர்கள் தன் வசம் உள்ள சொத்தை இடையூறு செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கானது 23.01.2025 அன்று சாட்சி விசாரணைக்காக போடப்பட்டு இருந்ததாகவும், அன்று தான் ஆஜராகாமையால் வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டதாகவும், தான் வேண்டுமென்றோ அலட்சியப்படுத்தும் நோக்கிலோ அவ்விதம் செய்யவில்லை என்றும், எனவே, தான் ஆஜராகாமல் தள்ளுபடியான பிராதை மறுபடியும் கோப்பில்

எடுக்க வேண்டியது நியாயமாக உள்ளதாகவும், இல்லாவிடில் தனக்கு ஏராள நஷ்டமும் கஷ்டமும் ஏற்படும் என கூறியுள்ளார்.

**<u>எதிருரையின் சுருக்கம்:</u>**

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் தரப்பில் உண்மைக்கு புறம்பான தகவல்களை கூறி தாவா அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டு அதற்கு எதிர்மனுதாரர்கள் உரிய எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், அதன் பிறகு அசல் வழக்கை மனுதாரர் மேல் நடத்தாமல் பலமுறை அவர் தரப்பில் வாய்தா வாங்கப்பட்டு இறுதியாக கடந்த 20.12.2024 அன்று சமூகம் நீதிமன்றத்தால் Special List ல் மேற்படி அசல் வழக்கு போடப்பட்டுள்ளது என்ற விபரம் ஒரு மாதத்திற்கு முன்பாகவே தெரிவிக்கப்பட்ட நிலையில் மனுதாரர் வேண்டுமென்றே மேற்படி தேதியில் வழக்கை நடத்த முன்வரவில்லை என்றும், கடந்த 23.01.2025 அன்று வழக்கை நடத்துவதற்கு மனுதாரர்/வாதி ஆஜராகாத நிலையில் அவருக்காக அவர் சார்பாக அவரது வழக்கறிஞர் ஆஜராகாத நிலையில் No representation என்று குறிப்பிடப்பட்டு அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், தற்போது மனுதாரர்/வாதி சமூகம் நீதிமன்றத்தில் தள்ளுபடியாகிய அசல் வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரணை செய்ய மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவில் வாய்தா தேதியில் மனுதாரர் ஆஜராகாததற்கு உரிய காரணங்கள் தெரிவிக்கவில்லை என்றும், மேலும் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ள நிலையில் அதை நிரூபணம் செய்ய மருத்துவ ஆவணங்களை எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், வேண்டுமென்றே எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக உகந்த காரணமின்றி பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனுவை அனுமதிப்பதற்கு எந்தவொரு முகாந்திரமும் இல்லை என்றும் என்பதால் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**தீர்வு**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கானது விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் ஆஜராகாமையால் அசல் வழக்கானது கடந்த 23.01.2025 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் வயது முதிர்வு காரணமாக உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கவில்லை என்றும், எனவே, கடந்த 23.01.2025 அன்று தள்ளுபடி ஆன தாவா வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளார்.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், உண்மைக்கு புறம்பான தகவல்களை கூறி தாவா அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் வேண்டுமென்றே மேற்படி தேதியில் வழக்கை நடத்த முன்வரவில்லை என்றும், வாய்தா தேதியில் மனுதாரர் ஆஜராகாததற்கு உரிய காரணங்கள் தெரிவிக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை அலைக்கழிக்க வேண்டும் என பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில், கடந்த 23.01.2025 அன்று தள்ளுபடி ஆன தாவா வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில், வேண்டுமென்றே அலைக்கழிக்க வேண்டும் என பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மனுதாரர் கூறிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இருந்தபோதிலும், மனுதாரர்களுக்கு தனது தரப்பு வழக்கை எடுத்துக்கூறுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவை அனுமதிக்கலாம் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 10.11.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.10 16:24:39 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**தரங்கம்பாடி.**

**இணைப்பு :**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.10 16:24:43 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி**